Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
10 SEP 1963
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) கதிரைமகத்துவம்

(2) திருப்பரங்கிரி அகவல்

(3) தம்பிராட்டியார் பஞ்சரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# கதிரைமகத்துவம்.

இது

மதுரை ஜில்லா சிவகங்கை ஸமஸ்தானம்

அருளிக்கோட்டையிலும்,

சிலோன் கண்டி பள்ளக்காலிலும் வசிக்கும்

பல்லேகல

மகா. ள. ள. ஸ்ரீ.

ரெ. முத்திருளப்பபிள்ளையவர்களின் குமாரர்

மதுரகவி

## ரெ. மு. மாணிக்கவேலுப்பிள்ளை

அவர்களால் இயற்றப்பட்டு

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

43483

43483

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# சிறப்புக்கவி.

மதுரைஜில்லா இளையான்குடி தாலுகா

கண்ணமங்கலம்

சடாட்சர அவதானி

குமாரசுவாமிப்பிள்ளையவர்களின் குமாரர்

**கண்ணியாபிள்ளையவர்கள்**

செய்தது.

பூவும்வானும்பொருந்தியதனிமுதற்
றேவர்தங்கருணைத்திருவிழியதனு
லுற்பவமாகியும்பரைக்கர்த்த
வற்புதவருட்கண்ணூருருளநம்
மெய்ப்பொருள்ஞானச்சொற்பிரகாசன்
கைக்கொருநெல்லிக்கனிபோற்றேற்ற
யெத்தலந்தோறுஞ்சித்துகள்காட்டிச்
சத்திவேலேற்றசுவாமிதன்புகழாங்
கதிரைமகத்துவக்காதையையுலகோர்
மதுரமதாகமனத்தினுட்கொள்ள
நாட்டினிற்சிறக்குநற்பதியருளிக்
கோட்டைவாழ்கங்கைகுலதிலகனுமா
முத்திருளப்பனற்றவனீன்ற
புத்திரனுகுமாணிக்கவேலிதனைக்
கலியுமைந்தாயிரப்பதினைந்ததின்மேல்
மலியும்பிரமாதீசவருடச்
சிங்கமுமைந்தாந்தேதியும்புதனுள்
தங்கியவுத்திரட்டாதிநல்வேளையிற்
சாற்றினன்கதிரைமகத்துவமிந்நூற்
போற்றுவரென்றும்புனிதராகுவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

# கதிரைமகத்துவம்.

## காப்பு.

வெண்பா.

கதிரை மகத்துவமாங் காதற் றுதியை
முதிருங் கவியா மொழியத்—துதிசெய்வே
னன்பினுடன் மாணிக்க வைங்கரனே நீயருள்செய்
தென்பிழைக டீர்ப்பா யினிது.

சீர்மே வியகதிரைச் செல்வக் குமரகுரு
பேர்மே வியதமிழைப் பேச—ஏர்மேவு
பொருமா முகத்தனு மாம்புனிதன் மாணிக்கப்
பெருமான் றிருவடி காப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியவிருத்தம்.

சீருலா வியமணிக் கிரணமார் முடிகளுந்
தேசுலவு நுதலாறினிற்
றிகழும்வெண் ணீறுமணி சிந்தூர திலகமுஞ்
செய்யபுரு வத்தினழகும்

ஏருலா வியகருணை யீராறு விழிகளு
மெழிற்குமுத மலர்நாசியும்
இணையொன்றி லாதசெந் துகிர்வாயி னதரமு
மிசைந்தநிரை யாமூரலும்

பேருலா வியபரம சிவனறிய மறைமுதற்
பேரதைவிரித்தநாவும்
பிறையென்ன வொளிர்கன்ன முன்னுக படமினும்
பேசரிய முகமாறுமாய்க்

காருலா வியகதிரை வரையதிர நடனமிடு
கருணாக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (க)

கந்தரங் குவியுமணி வடமுமர ளுருடைய
கண்மணித் தாவடமுடன்
கருங்கீட நீடு*மிந் துளமலரின் வாசமுங்
கமழ்பன்னி ரண்டுபுயமுஞ்

சந்தனங் களபகஸ் தூரிபரி மளமிகத்
தங்கமுப் புரிநூலுடன்
றண்ணாரு மார்பமும் பன்னிரு கரங்களுஞ்
சத்ருசங் காரவயிலுஞ்

---

*இந்துளமலர்—கடப்பம்பூ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர மிகுந்தபீ தாம்பரத் துகிலுமிடை
சோதியரை ஞாண்விளங்குந்
துய்யநடு வுந்தண்டை கிண்கிணிக வீரெனச்
சுருதிகா ணுப்பதமுமாய்க்

கந்தரங் குலவுகதிர் வரையதிர நடனமிடு
கருணாக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (உ)

வியனுலகி னிறைவனருள் கன்னியொரு பாலினுயர்
வேள்விவரை நாரியொருபால்
வீரவா குவுமெண்ம ரிளைஞரொரு பாலரிய
வீரரி லக்கரொருபால்

மயமிலகு கயவதன வைங்கரக் கடவுளா
*மாமணிப் பிள்ளையொருபால்
மயலற்ற யோகியாய் வடிவுற்ற நம்பரம
மயமுத்து லிங்கரொருபால்

சுயஞ்ஞமலி யூர்திவயி ரவருமொரு பாலிரவி
திதிகதிரை வரையுமொருபால்
தொழுமடியர் பவமொழிய நுதலணியும் ‡வெண்டுகளின்
மலையுமொரு பாலதாக

கயமுலவு நயகதிரை வரையதிர நடனமிடு
கருணாக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (௩)

---

*மாமணிப்பிள்ளை—மாணிக்கப்பிள்ளையார்.

‡வெண்டுகளின்மலை—விபூதிமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்குலைத் தொடுமருத முங்கிளையின் முழுதுபில
வங்கமின மாடுமிருபால்
மாசிலா வெண்டரள மணிதிரண் டலையினல்
வந்தது குவிந்ததிருபால்

சங்கினத் தொடுதவழ வுங்கயற் கெண்டைபல
தங்கிவிளை யாடுமொருபால்
சற்சலம் பெருகியிரு கரைபுரண் டிடவதிற்
ருவியெழும் வாளையொருபால்

அங்கினத் தொடுவிரா லுங்குதித் திடுபுதுமை
அம்மம்ம வென்சொல்லலா
மப்புனித கங்கைமா ணிக்கநதி மகிமையினை
யாரறிவ ரார்குளிப்பார்

கங்குலை யகற்றுகதிர் வரையதிர நடனமிடு
கருணை கரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (சா)

ஐயரே வற்பணிகள் செய்யவிட மைப்புரிங்
தயிலின லாவியற்ற
வசுரர்மலை யும்மதற் கருகிவிரு கடிகைவழி
யாமிடை திளைக்காணலும்

மைவிழியி ளுள்குறவர் மாதினடி யும்வேங்கை
மரமாகி நின்றவிடமும்
வள்ளியவ ளுந்தயிர்க டைந்தவிட மும்வெண்ணெய்
வைத்திலகு நெய்ப்பாறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்தளர்ந் திடமுதிய சிவனடிய ராய்வேழ
முகனையு நினைந்தவிடமும்
வெண்ணிறக் கற்கள்சந் தனமா யிருப்பதும்
மேற்செல்வ கதிர்காமனும்

கையயி லிலங்குகதிர் வரையதிர நடனமிடு
கருணைக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (ரு)

வருடமதி லுங்கடக மாதமத னிற்*குகுவும்
வந்ததி விருந்துநாளும்
மாலையிற் பெரியவொரு வேழமேற் பவனியா
மகிமையைச் சொல்லவெளிதோ

அருணன்மேற் றிசைபுகவு மாலயப் பூசைமுறை
யானசிங் களவராலே
அபிஷேக முந்தூப தீபனை வேதனமு
மாகவர்ச் சனைபுரிந்து

ஒருவரு மறிந்திடா ரகசியப் பொருளதா
யுள்ளவொரு பேழையதனை
ஒருவர்திரை மறைவதா யேந்திவரு வாரதனை
யோங்கலின் மீதுவைப்பார்

கருதுதற் கரியகதிர் வரையதிர நடனமிடு
கருணைக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (சா)

---

*குகு—அமாவாசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைமுது கிற்பொன்னி னாற்செய்த குடையதனி
னற்புறத் தழகாகிய
நற்றங்க வரசிலைப் பட்டமுங் கலகலென
நாயகப் பெட்டியதனை

கானவர் குலத்தராஞ் சிங்களரி லொருவர்வாய்
கட்டியிரு கண்மூடியே
கதிரைநா யகமுத்ரை யிட்டபெட் டியையுமவர்
கைகொண் டணைத்துவெளியாய்

மோனவடி வாங்கதிரை முக்கோண வீதியின்
முன்னர்வட வீதிவழியாய்
முருகேசர் பவனியொடு திருவீதி யழகையும்
மூடனுன் சொல்லுதரமோ

கானகஞ் சூழ்கதிரை வரையதிர நடனமிடு
கருணாக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (எ)

தந்தியர்ச் சகரோடு மாறெழுத் தட்சரந்
தருபேழை யைச்சுமந்து
தாங்கிவர மேளமொடு தாளமு முழங்கிடத்
தம்புருச் சத்தமதிரத்

திந்திமித் திமியெனச் சிங்களவ ராடிடத்
தேவர்பூ மாரிபெய்யச்
செய்யவிரு பாற்குடை கவித்திடக் கர்ப்பூர
தீவர்த்தி யுஞ்சொலிக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தினையின் மாவிளக் கவைகள்பல் லாயிரந்
திரளதா யிருமருங்கிற்
றிரண்டொளி செயக்குக் குடக்கொடிக் கவரியுந்
திகழுமிரு பாற்றுலங்கக்

கந்திகம ழுங்கதிரை வரையதிர நடனமிடு
கருணைக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (அ)

அந்தமில குங்கொடிக ளுங்கணக் கில்லையே
யாலவட் டஞ்சுருட்டி
அணியுமணி யாய்ப்பிடித் தடியரிரு புறம்வருவ
ரதிசெயக் கண்டிசங்கம்

சுந்தர மிருந்தகா னவர்மாத ரெழுவர்முன்
சூழ்ந்துவந் திடத்தொழும்பர்
துதிகதிரை வேற்குமர ஹரஹரா வென்றவோர்
சொல்லதே வெள்ளமொலியாம்

இந்தவித மாகவட வீதியுஞ் சென்றுபின்
னெனதன்னை வள்ளிகோயிற்
கெய்தியப் பேழையுட் கொண்டுசெல் வாரதே
யினியொன்று மெவருமறியோம்

கந்தரங் குலவுகதிர் வரையதிர நடனமிடு
கருணைக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (கூ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத் துள்வைத்த பேழையைக் கொண்டுவந்
தானைமே லேற்றுவித்து
ஹரஹரா கதிரைவேற் கரஹரா வென்றடிய
ரன்பான துதிகூறிட

சீலவயி ரவரெழுந் தென்வீதி வழியதே
சென்றுவிண் டேவரேற்றுந்
திருவால யத்தினுட் சென்றுநீஇப் பேழையைச்
சிறிதுமறி யாதவிதமாய்த்

திரைகொண்டு மூடியே பொற்கோயி லுள்ளிட்ட
திரையொன்றை நீக்கியுள்ளாய்ச்
செல்வரப் பேழையினை வைத்துவரு வாரதே
தெரிகிலா ரதுரகசியம்

காலனை யகற்றுகதிர் வரையதிர நடனமிடு
கருணாக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
காட்சிதரு கதிர்காமனே. (க0)

ஈரேழு நாளுமிது போலவா நங்கதிரை
யென்கடவு ளின்பவனியாம்
இலகுபூ ரணையன்று சக்ரவட் டக்குடைக
ளெங்குங் கவித்துவரவே

பாரேழு மீன்றபர சத்தியருள் புத்திரர்
பவனிவந் தரைக்கடிகையிற்
பகருமேற் றிசைதனுசர் சிகரிசென் றவுணர்தம்
பவமதை விலக்கிவருவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராரு மற்றைநா ளன்றுபக லோலைமறை
    வாகமா ணிக்கநதியில்
அக்கடவுள் கங்கைநீ ராடுவா ரடியர்நீ
    ராடுவர்க் கருளுமருள்வார்

கார்கவிந் திடுகதிரை வரையதிர நடனமிடு
    கருணாக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
    காட்சிதரு கதிர்காமனே. (கக)

மஞ்சாரும் விழிவள்ளி மாதம்மை யுந்தெய்வ
    மங்கையும் மருவுபுயனே
மதுரகவி யின்வகைக ளறியாத சிறுவனுன்
    வசனித்த வாசிரியமும்

அஞ்சாறொ டொன்றிதற் கருள்புரிந் தெனதுவினை
    யகலவே கருணைபுரிவாய்
அயனுலு மறியாத மகிமையுள வஸ்துநீ
    அப்பனென் சொற்பிழையதை

நெஞ்சினுட் கொள்ளாது நீயென்னை ரக்ஷிக்க
    நின்கடமை யாகுமையா
நீடித்த ஆயுளுட னகலாத செல்வமும்
    நீயெனக் கருள்புரிகுவாய்

கஞ்சமல ருங்கதிரை வரையதிர நடனமிடு
    கருணாக ரக்கடவுளே
கருதுமென் றுயரெலா நீக்கியரு ளுதவுவாய்
    காட்சிதரு கதிர்காமனே. (கஉ)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா.

மால்கோவி லுங்கனக மாரிமக மாயிவளர்
ஆலயமுஞ் சென்றங் கருச்சித்தே—மேலுங்
கதிரைமலைத் தீபங் கண்டுதொழு தேனமது
கதிரைமலை யன்கிருபை காண். (க)

எழுமலை கண்டங் கேற்றுவா னங்கதிரை
வாழுங் கிதுருநபி வாழ்க—வாழியசீர்ப்
பால்குடியாந் தாசரது பாதங்க ளைப்பணிந்து
மால்கழுவி நெஞ்சே மதி. (உ)

சித்த மகிழ்ந்தே நீ சேவற்கொடி யேற்ற
வெற்றி மயில்வீரா விண்ணப்பம்—முத்துநிரை
மாணிக்க கங்கை வளையுங் கதிர்காம
மாணிக்க மேயருளு வாய். (ங)

மித்திரரைக் காக்கவே வேலேந்து மெய்யாநோய்ச்
சத்துருவை வெல்லச் சமயமிது—முத்துலிங்கர்
வாழுங் கதிரை மலைவீற் றிருப்பவனே
யாழும் பவமகற்றி யாள். (ச)

நம்பியந்நாட் பேணு நாரிக்கா யாவலுற்று
வெம்பியவ ளைப்பணிந்த வெட்கமா—விம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிரைவளர்ந் தண்ட முகடுலவுங் காவாங்
கதிரைமலை யுள்ளொளித்தாய் காண். (ரு)

நீயன்றி யொன்றை நினைந்தவென் னெஞ்சப்
பேயை வசமாக்கல் பெரிதாமோ—மாயைமிகத்
தந்தகன் னெஞ்சத்துத் தானவரை யுந்துடைத்து
வந்தகதிர் காமனருள் வாய். (சு)

கதிரை நகரதனைக் காக்குங் கடவுள்
மதுர மொழிவள்ளி வாழ்க—கதிரைவளர்
குஞ்சரியும் வாழ்க குருமுத்து லிங்கரது
செஞ்சரணம் வாழ்க சிவா. (எ)

மாணிக்க கங்கையா மாநதியும் வாழ்கசீர்
மாணிக்கப் பிள்ளையார் வாழ்வாக—மாணிக்க
வேலுரைத்த வாசிரிய மேதினியெங் கும்வாழ்க
வான்மிக்கு மல்க வளம். (அ)

அடியாரைக் காக்க வறுமுகனுய் வந்த
வடிவேற் கரனை மனது—படியவே
வைத்த வடியார்கள் வாழ்க சிவமதமுஞ்
சுத்தமறை வாழ்க சுபம். (கூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்.

ஹரியோமென் றட்சரத்தி லாதி யாகி
அகிலாண்ட கோடிநா யகனு மாகி
விரிவான வெழுகடலெண் கிரியு மாகி
விண்ணுரு வெண்மதியு மிரவி யாகி
அரியாகி யயனாகி யரனு மாகி
அறுமுகமா யுருவாகி யமர ரேத்றக்
கரியாதி யுலவுகதிர் காம மேவுங்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (க)

ஆருமறி யாதபொரு ளந்த மாகி
அரனார்க்கு முபதேசக் குருவு மாகி
வாருலவு வள்ளிமண வாள னாகி
மங்கைதெய் வானைமண மகிழ்வோ னாகி
தாருலவு புயத்தோனா யுயிர்கட் கெல்லாஞ்
சடாக்ஷரமா மமுதளிக்குந் தந்தை யாகி
காருலவுங் கதிரைமலை மேவு மெங்கள்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (உ)

இறைவிக்கோர் சுதனாகி யெங்கோ னாகி
யென்றந்தை தாய்குருவுந் தெய்வ மாகி
மறையார்க்கு மறியவொணா மறையோ னாகி
மாணிக்க கெங்கைதனக் கதிப னாகி
பிறைவதனத் திருமுருகப் பெருமா னாகி
பேசரிய வன்பர்தொழுந் தெய்வ மாகி
கறையடிக ளுலவுகதிர் காம மேவுங்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு கரமிலங்கப் பவள வாய்பன்
னிருகண்ணு லெனைநோக்கு மிறைவ னாகி
சீராருஞ் சேணுலகத் தேவ ராதி
தேவரின்சே னுபதியாய் மாயை யீன்ற
சூராருஞ் சூர்களு வறுத்தோ னாகி
தொழும்பரிதை யத்தெழுந்தச் சோதி யாகி
காராருங் கதிரைமலை மேவு மெங்கள்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (ச)

உம்பர் பிரானளித்த கன்னிபாக னாகி
உலகேழு முண்ட வன்றன் மருக னாகி
வம்பரிடத் தணுகாத வஞ்ச னாகி
வளர்ஞான வடிவாகி மலர்த்தா டன்னை
நம்புவார்க் கருள்கரணு னந்த மாகி
நவில்சோதிப் பிரகாச வள்ள லாகி
கம்பமதக் கயமுலவுங் கதிரை நாமக்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (ரு)

ஊனாகி யூண்டிரண்ட வுடலு மாகி
உயிராகி ஐம்பூத வறிவு மாகி
நானாகி யெம்முளநன் வினையு மாகி
நான்றேடு நன்வழிக்கோர் நாம மாகி
வானாகி வானுடுவு மங்கு லாகி
மாறாத பேரின்ப வாரி யாகி
கானாகிக் காணுசரப் பொருளு மாகுங்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (கூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குநிறை பரவெளியி னேக ளுகி
யென்றுமெனக் கொருதுணைவ ளுகி மேலுஞ்
சங்கரர்க்கு மகவாகித் தாசர்க்காகச்
சத்துருசங் காரவடி வேல ளுகி
மங்கையினுக் கோர்வேங்கை மரமு மாகி
வனவேட ளுகிசங்க மாண்டி யாகி
கங்குலற ஞானப்பிர காச ளுகுங்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (எ)

ஏதுநிக ரில்லாத வஸ்து வாகி
இகபர மெலாம்பணியத் தெய்வ மாகி
வாதுபுரி சூரரின வயிரி யாகி
மாமயிலின் மீதுலவு மகிப ளுகி
ஓதுதமி ழாற்றுதிக்கு முண்மை யாகி
உயர்வேத வித்தாகி யோகார் சன
காதிதுற வோர்பரவக் கதிரைமேவுங்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (அ)

ஐயனு யருந்தவர்க்கோ ரமுத மாகி
அன்பத்தோ ரக்ஷரத்தி னதிப ளுகி
தையல்மா ரிருவருக்கோர் பாக ளுகி
சச்சிதா னந்தசிவ சொரூப மாகி
மெய்யருக்கு மெய்யாக விளங்கு ஞான
விளக்காகி விளக்கிலெழு மொளியு மாகி
கைகூப்பி யான்போற்றுங் கதிரை நாமக்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (கூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகொம்பு மிருசெவியும் மதமுங் காட்டு
மோர்நால்வாய் முகர்க்கிளைய யோக ளுகி
திருவன்பு கொண்டவர்தஞ் செல்வ மாகி
திகட்டாத தேன்பாகு வர்க்க மாகி
பெருமன்பு புரிஞான போக மாகி
பிறப்பிறப் பற்றபரப் பிர்ம மாகி
கருதுவார் கண்காணக் கதிரை வாழுங்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (க0)

ஓங்கார மானபரஞ் சோதி யாகி
ஓர்மகர வுருவாகி யும்பர்க் காக
ஆங்காரமான வனற் பொறியு மாகி
அறுமுகமுஞ் சரவணையிற் றவழ்வ ளுகி
பாங்கான வறுமாதர் முலைப்பா லுண்ட
பாலகனு யிலக்கர் நவர்துணைவ ளுகி
காங்கேய னெனுநாமக் கருணு னந்தக்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (கக)

UNIVERSITY OF CEYLON
28 NOV 1946
LIBRARY.

ஔவியமுறு மனத்தவரா லறியா ளுகி
அறுகோண மாளிகைக்கி யரச ளுகி
புவிதொழவு மாறுபடை வீடா ளுகி
புள்ளிமயி லேறிவரும் புனித ளுகி
கவிகூறுங் கவிவலர்தங் கருத்து மாகி
கலிநாளிற் கண்கண்ட தெய்வ மாகி
கவுரியருள் மகளுகி கதிரை நாமக்
கடவுளே யெனைக்காக்குங் கதிரை வேலு. (கஉ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குமணி யணிபவர்தஞ் சுற்ற மாகி
ஹரஹரா வெனப்புகல வருளு மாகி
திக்கெலாம்புகழ் கதிரைத் தேவ ளுகி
செந்தமிழில் விளைந்தநவ ரசமு மாகி
மிக்கமது ரக்கவிமா ணிக்க வேலும்
வேண்டுவர முதவியன்பாற் றுணைவ ளுகி
நற்கதிரை மகத்துவளு யிலகு மெங்கள்
நாதனே கதிரை நாயகமே வாழ்க. (கங.)

---

# கதிர்காமக்கண்ணிகள்.

சீர்பூத்த ஞானத் தீபச் சுடரொளியாங்
கார்பூத்த வேழமுகன் காப்பாங் கதிர்காமா. (க)

தெள்ளுதமிழ்க் காதி தேவரா மாணிக்கப்
பிள்ளையார்க் கன்பு புரிவேன் கதிர்காமா. (உ)

சேவற் கொடிதிகழச் செப்போடு வேய்ந்திருக்குங்
கோவிலையுங் காணவரங் கொடுப்பாய் கதிர்காமா. (ந)

ஆலயத்துட் சென்று அழகுமணி வாயிலின்முன்
சேலைத் திரைவணக்கஞ் செய்வேன் கதிர்காமா. (ச)

மனத்தாலு மென்னினிய வாக்காலு முன்சரணம்
நினைத்து துதிக்கவருள் நீயே கதிர்காமா. (ரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவ ராஸீயுந் தீர்த்தப் பிரசாதம்
சங்கையுடன் வாங்கவரந் தாதா கதிர்காமா. (௬)

சவுமிய மூர்த்தியையுந் தாய்கோ கனகையுநான்
புவியிற் றினம்வாழ்த்திப் புகழ்வேன் கதிர்காமா. (௭)

பத்தினியா மம்பாள் பராசக்தி யைப்பணிந்து
சித்தமயக்கந் தெளியுங் கதிர்காமா. (௮)

வில்வ மரத்தடியில் வீழ்ந்து நமஸ்கரிப்பேன்
அல்லல் வினையகல வருள்வாய் கதிர்காமா. (௯)

கோவிலையுஞ் சுற்றிக் கும்பிட்டுக் கொள்வேனென்
பாவ மகற்றுவதுன் பாரங் கதிர்காமா. (௧0)

தெய்வானை யம்மன் றிருக்கோவில் சென்றவள்தன்
செய்ய சரண்போற்றி செய்வேன் கதிர்காமா. (௧௧)

முக்கோண வீதி முனையிலகு செம்பவழக்
கற்கோவி லொன்றதனைக் காண்பேன் கதிர்காமா. (௧௨)

வண்ணமணிக் கோயில் வாழ்வள்ளி யம்மனிரு
தண்ணூர் சரண்டுதிப்பேன் ஸ்வாமி கதிர்காமா. (௧௩)

சன்மார்க்க யோக சாதனரா முத்துலிங்கம்
நன்மலர்த்தா ளும்பணிவேன் நாதா கதிர்காமா. (௧௪)

பச்சைச் சடையன் பகர்வடுக னற்றாளை
இச்சையுடன் பணிவே னிறைவா கதிர்காமா. (௧௫)

வேலுமயி லுந்துணையா மேவிடும்ப நாதனையும்
பாலுகுடி தாசரையும் பணிவேன் கதிர்காமா. (௧௬)

சித்தர்பதி னெண்மரையுஞ் சிந்திப்பே னுன்னுமப்
பத்தியுள வன்பர்களைப் பணிவேன் கதிர்காமா. (௧௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்க கங்கையெனு மாநதியி னீராடி
காணிக்கை யுங்கொடுத்துக் காண்பேன் கதிர்காமா. (கஅ)

கதிரை மலையதனைக் கண்டுதெரி சிப்பேனென்
மதியிற் குடியாக வாழ்வாய் கதிர்காமா. (கசு)

திருநீறு விளையுமிடஞ் சென்றங் கிருந்தெடுக்குந்
திருநீ றணியவினை தீருங் கதிர்காமா. (உO)

சூரன்மலை கண்டு தொழுவே னெனைக்காக்கும்
பாரமுன தையாகண் பாருங் கதிர்காமா. (உக)

செல்வக் கதிர்காமம் சென்றுதெரி சிப்பேனுன்
செல்வமுடன் வாழ்க செய்வாய் கதிர்காமா. (உஉ)

நெய்ப்பாறை தொட்டவிரல் நெற்றிக்கொருதிலகம்
வைப்பதுவு முந்தன் மகிமை கதிர்காமா. (உங)

வேங்கை மரமாக வேடுவர்க ளுன்மகிமை
பாங்கா யறிந்தவிடம் பார்ப்பேன் கதிர்காமா. (உச)

முத்திக்கு வித்தே மூவுலகுக் கோரமுதே
சத்தி தனயாவென் ஸ்வாமி கதிர்காமா. (உரு)

வள்ளிக் கிசைந்த மலரே மலர்ச்சுரும்பே
தெள்ளி முகர்க்கிளைய தேவே கதிர்காமா. (உசு)

சோதி நவமணியே தூண்டா மணிவிளக்கே
ஆதிவே தப்பொருளே ஐயா கதிர்காமா. (உஎ)

எண்ணற் கரிதான வேகாந்த மேஞான
வண்ணக் களஞ்சியமென் வாழ்வே கதிர்காமா. (உஅ)

வெண்டரள முத்தே விளைந்த ரசக்கரும்பே
உண்டவற்கு மின்ப யோகா கதிர்காமா. (உசு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறின்ப மொன்று விரும்பாற் கெலாமெளிய
பேரின்ப வெள்ளப் பெருக்கே கதிர்காமா. (௩0)

குஞ்சரியுங் கூடிக் குலவுன் குழகாவுன்
செஞ்சரணம் போற்றி செய்வேன் கதிர்காமா. (௩க)

வடிவேற் கரசேபொன் மயில்வா கனப்பொருளே
அடியார்க் கடியேனுன் னபையங் கதிர்காமா. (௩உ)

வாக்கென்று முன்னை வாழ்த்தவே நின்கழலில்
பூக்கொண்டு பூசை புரிவேன் கதிர்காமா. (௩௩)

வாராயோ யெந்தனெதிர் வந்துமெளி யேன்வதனம்
பாராயோ வாறுமுகப் பாலா கதிர்காமா. (௩ச)

புண்கொண்ட நெஞ்சப் புலையேன் வினைதீரக்
கண்கண்ட தெய்வமுனைக் கண்டேன் கதிர்காமா. (௩ரு)

சற்று மறிவிலியாஞ் சண்டாள னென்றனைக்கை
விட்டிடா மற்காக்க வேணுங் கதிர்காமா. (௩சு)

மெத்தப் பயந்தமன முள்ளவெளி யேனெனது
சித்தந் தெளியவருள் செய்வாய் கதிர்காமா. (௩எ)

ஆத்தாளா மெங்க ளபிராமி யண்டமெலாம்
பூத்தா ளருளுகந்த பொருளே கதிர்காமா. (௩அ)

கோள்க ளெனைப்பற்றிக் கொடுமைகளுஞ் செய்யாமல்
நாளு மெனைக்காப்பாய் நாதா கதிர்காமா. (௩௯)

தந்தைக்கு மந்திரமுஞ் சாற்றிஞ யிந்நாளில்
மைந்த னெனக்கொருசொல் வழுத்துங் கதிர்காமா' (ச0)

இன்ன முனதுமன மிரங்காத தேனோசொல்
வர்ன மயிலழகா வாவா கதிர்காமா. (சக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டுண்ண மண்சுமந்து பிரம்பா லடியேற்ற
ஒட்டனே வுந்தாதை யோதுங் கதிர்காமா. (சஉ)

ஆட்டுக்கா லாசைகொண்ட வம்பரத்தி பிள்ளையென
நாட்டிலுனைச் சொல்வதென்ன ஞாயங் கதிர்காமா. (சங)

வெண்ணை திருடியுண்டு வேயின் குழலூதுங்
கண்ணன் றிருமருகா காப்பாங் கதிர்காமா. (சச)

எந்நாளு மேகவலை யெண்ணிப் படுந்துயரைச்
சொன்னாலுங் கேட்காயோ சுவாமி கதிர்காமா. (சரு)

ஏழைக் குனையலது யினிவேறுண் டோகதியிவ்
வேளை தயவுசெய்ய வேணுங் கதிர்காமா. (சசு)

கல்லாத நாயேன் கவியா லுனைப்புகழ
நல்ல வரமெனக்கு நல்குங் கதிர்காமா. (சஎ)

ஐயாநீ யென்னை ஆதரிக்க வேதயவாய்
மெய்யா மயிலில்வர வேணுங் கதிர்காமா. (சஅ)

நெஞ்சம் பயந்து நின்றலையு மென்வறுமை
கிஞ்சித் தறியாயோ கிருபைக் கதிர்காமா. (சகூ)

வாதிக்கும் நோயால் வறுமையால் நாடோறுஞ்
சோதிப் பதுமழகா சொல்லுங் கதிர்காமா. (ரு0)

வாடித்த வித்தமனம் மகிழ்வாகி யுன்மகிமை
பாடித் துதிப்பதென்றோ பகர்வாய் கதிர்காமா. (ருக)

சண்டாள னென்றுமெனைத் தள்ள நினையாதீர்
அண்டர் பணியு மரசே கதிர்காமா. (ருஉ)

காப்பா ரெவருமினிக் காணமல் நின்றுனது
பூப்பாத மேதஞ்சம் புனிதா கதிர்காமா. (ருங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்ச னெனைக்காக்க வருகின்ற வேளையது
குஞ்சரியி னுற்றடையோ கூறுங் கதிர்காமா. (௫௪)

புள்ளி மயிலேறி பெருமானீர் வந்தவழி
வள்ளி மறித்தாளே வழுத்துங் கதிர்காமா. (௫௫)

அன்னை யிருவருக்கு மறியாச் சிவனுனா
னென்ன தவர்செய்தே னிசையுங் கதிர்காமா. (௫௬)

பெற்றோர்கள் பிள்ளை பிழைபொறுப்ப தேகடனென்
றுற்ற மனுநீதி யுண்டாங் கதிர்காமா. (௫௭)

தாய்மா ரிருவரெனைத் தள்ள நினைப்பாரேல்
சேயானு முய்யவழி தெரியேன் கதிர்காமா. (௫௮)

நெஞ்ச மிரங்கியெந்த னேராக வந்துனது
கஞ்ச மலரடியுங் காட்டுங் கதிர்காமா. (௫௯)

சென்மங்கள் தோறுஞ் செய்த பழவினையாங்
கன்மங்கள் தீர்ப்பதுமுன் கடனே கதிர்காமா. (௬0)

வந்தனமுஞ் செய்தேன் மயிலேறி நீவருக
கந்தாகு காகிருபைக் கடலே கதிர்காமா. (௬௧)

எத்தனையோ கூவி யிசைத்தானு முன்னினிய
சித்த மிரங்காதேன் ஸ்வாமி கதிர்காமா. (௬௨)

ஏழைக் கிரங்குபவ னென்றெண்ணி யுந்தனிரு
தாளைப் பணிந்தேனுன் தஞ்சங் கதிர்காமா. (௬௩)

யென்னைக் கடைக்கண்ணு லேறிட்டுப் பார்ப்பதனு
லுன்னைக் குறைசொல்வா ருண்டோ கதிர்காமா. (௬௪)

பன்னிரு கண்ணிருந்தும் பாரா திருப்பதுமேன்
இன்ன பிழையென் றிசைப்பாய் கதிர்காமா. (௬௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு காதிருந்து மென்சொல்லு மேற்காத
போராண்மை யென்ன புகலுங் கதிர்காமா (௬௬)

நம்புவரைக் காக்கும் நாதநீ யென்றலவோ
அம்புவியி லுன்னை யடுத்தேன் கதிர்காமா (௬௭)

ஆருங் கெதியிலையென் றடுப்பவரைக் காராத
பேரு முலகிலுண்டோ பேசுங் கதிர்காமா. (௬௮)

சந்ததமுங் கூவியுனைத் தஞ்சமென்றும் கேளாதேன்
எந்தன் பவச்செயலோ யீசா கதிர்காமா. (௬௯)

இரும்பா கிலுமிழகும் மெள்ளேனுஞ் சித்தமென்பால்
திரும்பா திருப்பதுமேன் செப்புங் கதிர்காமா. (௭0)

பாருக்கு ளுன்புகழைப் பாடாமல் வேறுமொரு
பேரைப் புகழ்ந்துகவி பேசேன் கதிர்காமா. (௭௧)

சந்தத் துடன்கவிகள் சாற்றவறி யாச்சிறிய
மைந்தன் வினைதீர்க்க வாவா கதிர்காமா. (௭௨)

எவன்றேடி னுலுநமக் கென்னவென்று நீயிருந்தால்
அவனிதனி லுன்புகழுக் கழகோ கதிர்காமா. (௭௩)

ஆறு படைவீட்டுக் கதிகாரி நீகடைக்கண்
பாரும் பிணியகலப் பண்ணுங் கதிர்காமா. (௭௪)

பொய்ய னிவனென்று புறம்பாக்க வெண்ணுதீர்
ஐயா கதிரைமலைக் கரசே கதிர்காமா. (௭௫)

சின்னஞ் சிரியேனுன் செப்புங் கவியதனு
லென்ன பயனென்றோ யிகழ்ந்தாய் கதிர்காமா. (௭௬)

வாமி யருள்பாலா மயிலேறுஞ் சேவகனீ
சாமிநா தாவுனது தஞ்சங் கதிர்காமா. (௭௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னடியைப் போற்றி புகழ்ந்து கவியாற்பாடும்
உன்னடியார்க் கேதுகுறை வுண்டோ கதிர்காமா. (எஅ)

மதியிரவி நாளும் வலமாக வந்துபணி
கதிரை மலைக்கரசே கண்ணே கதிர்காமா. (எகூ)

குகநாத மந்திரமுங் கூறாத பாவியென்னை
இகழாதே ஐயாநீ ரெந்தை கதிர்காமா. (அ0)

அன்ப ருளத்தி லமர்ந்தாடுந் தெய்வமுநீ
இன்ப மெனக்கருள்வ தென்றோ கதிர்காமா. (அக)

கோபதியும் பெற்ற குஞ்சரிக்கு யானொருசேய்
பாப மகன்றிடக்கண் பாருங் கதிர்காமா. (அஉ)

ஞானக் குறத்திவள்ளி நாயகிதன் பிள்ளையெனை
யேனோநீ காரா திருந்தாய் கதிர்காமா. (அஙு)

எளியே னெனைக்காக்க யின்னேரந் தாமதமேன்
ஒளியாமற் சொல்லு முண்மை கதிர்காமா. (அச)

சேயனு மென்பால் திரும்பாதோ வுன்கிருபை
வாய்திறந்து சொல்லும் மௌனக் கதிர்காமா. (அரு)

எத்தனையோ நான்கூச்ச லிட்டாலு முன்மனது
சற்று மிரங்கிலையே சுவாமி கதிர்காமா. (அசு)

படிகாக்கு மெய்யாவுன் பதம்காக்கு நாயேனென்
குடிகாக்க வாவாவா குமரா கதிர்காமா. (அஎ)

நவவீர ரும்மிலக்கர் நற்றுணைவ நீயெனது
பவமகல வேகிருபை பண்ணுங் கதிர்காமா. (அஅ)

கண்ட விடமெல்லாங் கைகூப்பி யான்வணங்கித்
தெண்டனிட்டுங் காப்பார் தெரியேன் கதிர்காமா. (அகூ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாந் தெய்வம் நீயே யென்றன்மனது
இச்சைவைத்துப் போற்று மெனையாள் கதிர்காமா (கூ0)

ஆரையோ கூவி யழைக்கிறே னென்றெனைநீ
பாரா திருப்பதுவும் பாபங் கதிர்காமா. (கூக)

புள்ளி மயிலேறி பேதையென் கண்காண
வள்ளிதெய் வானையுடன் வருவாய் கதிர்காமா (கூஉ)

கோழிக் கொடியாடக் குற்றமிலா தேகவிஞர்
வாழித் தமிழ்பாட வருவாய் கதிர்காமா. (கூங)

கான்மங் கையராடக் கர்ப்பூரச் சோதிமின்ன
வான்மங் கையர்வாழ்த்த வருவாய் கதிர்காமா. (கூச)

மட்டிலா துன்மகிமை வர்ணித் திடும்பனுமுன்
கட்டியமுங் கூறிடவா கருணைக் கதிர்காமா. (கூரு)

அன்னே சிறுவ னறியாமை யாற்கவிகள்
சொன்ன பிழைபொறுப்பீர் சுவாமி கதிர்காமா. (கூசா)

பேரருள் மாணிக்கப் பிள்ளையா ரும்வாழ்க
கார்வண் ணனும்வாழ்கக் கருணைக் கதிர்காமா. (கூஎ)

வயிரவரும் வாழ்க வளரிவ் வுலகின்ற
பயிரவியும் வாழ்க பரனே கதிர்காமா. (கூஅ)

குஞ்சரியும் வாழ்கக் குருபரா வுந்தனிரு
செஞ்சரணம் வாழ்க தேவா கதிர்காமா. (கூகூ)

மதுர மொளிவள்ளி வாழ்கவே முத்துலிங்கம்
கதிரை நகர்வாழ்க கந்தா கதிர்காமா. (க00)

சேவற் கொடிவாழ்க செங்கதிர்வே லும்வாழ்க
மாமயிலும் வாழ்க வாழ்க கதிர்காமா. (க0க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரைமலை யோரேழு கனகவரை யுஞ்செல்வக்
கதிர்காம மும்வாழ்க கருணைக் கதிர்காமா. (கO௨)

பாலுகுடி தாசர் பதமுந் தினம்வாழ்க
மேலுங் கதிரைநபி விளங்க கதிர்காமா. (கO௩)

மெய்யாந் தமிழை விளக்குங் கலைமகள்தன்
செய்ய பதம்வாழ்க செல்வக் கதிர்காமா. (கO௪)

மாணிக்க கங்கையென்றும் வாழ்கவே யிவ்வுலகில்
மாணிக்க வேல்கவியும் வாழ்க கதிர்காமா. (கO௫)

நயகதிரை நாமம் நவில்வா ரவர்க்குமொரு
துயரென்ப தில்லையினிச் சுபமாங் கதிர்காமா. (கO௬)

கதிர்காம மேவாழ்கக் கருதுமடி யார்கள்நய
துதிவாழ்க வென்றுஞ் சுபமே கதிர்காமா. (கOஎ)

# வள்ளியம்மன்கண்ணிகள்.

திருமேவு தென்கதிரைச் செல்வமே யுன்கமல
இருதா ளிணைபோற்றி யெந்தன்வள் ளித்தாயே. (க)

நின்கோயில் முன்பாக நின்றுபணி வேணுனது
அன்பா னெனக்குவர மருளும்வள் ளித்தாயே. (௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானீன்ற கண்ணே வடிவேலர்க் கோரினிய
தேனேயென் னுள்ளத் தெளிவேவள் ளித்தாயே. (ங)

மதுரமொளி யாளே மரகதத்தி னூற்கொடியே
கதிரை நகர்க்குமதி காரிவள் ளித்தாயே. (ச)

வேடர் குலத்தின் விளக்கே விளக்கொளியே
மாடப் புறாவினமே மயிலேவள் ளித்தாயே. (ரு)

கதிரைப் பெருமான் கருத்துக் கிசைந்தவின்ப
மதுரக் கனிரசமே வாவாவள் ளித்தாயே. (சு)

தேனுந் தினைமாவுந் திகட்டக் கொடுத்துமுரு
கோனை வசப்படுத்திக் கொண்டவள் ளித்தாயே. (எ)

வில்லம்பு கொண்டகர வேடுவனை வைதுதள்ளி
நில்லென்று சொன்னவளும் நீயோவள் ளித்தாயே. (அ)

ஆண்டிமக னண்டி யவனை வசப்படுத்த
வேண்டித் தினைகாத்த விமலிவள் ளித்தாயே. (கூ)

தும்பியொன் றுக்கஞ்சி தூங்க கிழவனையே
நம்பியவ னுக்கிசைந்த நாரிவள் ளித்தாயே. (க0)

வேலப்ப னுன்னுசை வெறியாலே யுந்தனிரு
காலைப் பிடித்ததென்ன காலம்வள் ளித்தாயே. (கக)

குறவர் குடிகாக்குங் கொற்றவனை நம்பியருள்
இறைவி யுனைப்பணிவே னென்றும்வள் ளித்தாயே. (கஉ)

பேதையே னென்பால் பெற்றாள் முகம்பார்த்துத்
தீதகல்வ தென்றோ செப்பும்வள் ளித்தாயே. (கங)

பெற்ற மனம்பித்தாம் பிள்ளைமனங் கல்லெனவும்
உற்ற மொழியதனை யுணர்வாய்வள் ளித்தாயே. (கச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழக் கடலின் அலையிற்று ரும்பானேன்
ஏழைக் கிரங்குவது மென்றோவள் ளித்தாயே. (கரு)

கொம்பிழந்த மந்திக் கூட்டமது போலானேன்
என்பாலில் நீவருவ தென்றோவள் ளித்தாயே. (கசு)

மரக்கலத்தின் மீதுயர்பாய் மரங்காத்த கொக்கானேன்
இரக்கமுட னெந்தனைக்கை யேந்தும்வள் ளித்தாயே. (கஎ)

சீமூதங் காணுத செந்நெற் பயிரானேன்
தாமதமே னின்கருணை தாதாவள் ளித்தாயே. (கஅ)

நித்தம் வறுமையினல் நின்று மயங்குவது
மெத்தனையோ சொன்னே னெளியேன்வள் ளித்தாயே. ()

வேலனையும் போற்றி விண்ணப்பஞ் செய்து
பாலன் றுயரகலப் பண்ணும்வள் ளித்தாயே. (உ०)

குஞ்சரியா மன்னை கோகனகத் தாள்பணிவேன்
வஞ்ச நினையாமல் வாவாவள் ளித்தாயே. (உக)

முத்துலிங்க சுவாமி முண்டகத்தா ளும்பணிவேன்
சித்த மிரங்கியருள் தேவிவள் ளித்தாயே. (உஉ)

எந்தன் றுயர்க்குமருந் தில்லையா வுன்கிருபை
வந்தா லதுபோது மாதேவள் ளித்தாயே. (உங)

என்ன பிழையதுசெய் திருந்தாலும் நீயெனது
அன்னை மனம்பொறுத்து ஆழ்வாய்வள் ளித்தாயே. (உச)

பெம்மான் றிருமகனைப் பிரியாத தேவியுநீ
அம்மாநா னுந்தன் அபையம்வள் ளித்தாயே. (உரு)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வயானையம்மன் கண்ணிகள்.

பொன்னார் கதிரைவளர் பூரணியேயுந்தனிரு
மின்னார் சரண்போற்று வேனேதெய் வானையம்மா. (க)

இந்திரனுக் கோர்மகளா யெவ்வுலகை யுங்காக்க
வந்த மகத்துவமாம் வாழ்வேதெய் வானையம்மா. (உ)

மின்னற் கொடியே விலையில்லா மாமணியே
பொன்னே சுரும்பாரும் பூவேதெய் வானையம்மா. (௩)

கன்னலமுதே கற்கண்டே பொற்கனியே
வன்னக் குயிலே மயிலேதெய் வானையம்மா. (௪)

மாசற்ற மாவனமே வண்ணக் கயல்விளியே
தேசுற்ற பொன்வடிவே தேவிதெய் வானையம்மா. (௫)

சேணுலகர் போற்றுஞ் சிந்தா மணித்திரளே
பேணுவார் தங்கள் பொருளேதெய் வானையம்மா (௬)

தேடக் கிடையாத் திரவியமே நற்புலவர்
பாடற் கருளுதவும் பாவாய்தெய் வானையம்மா (௭)

வான வரைக்காக்க வந்தவடி வேற்கரசர்
ஞானக் கருத்தறியும் நாரிதெய் வானையம்மா. (௮)

இகம்போற்றுந் தாயே யெளியே னெனக்கினிய
சுகங்காட்டி யாள்வதென்று சொல்லுந்தெய் வானையம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்மமா யென்னை மயங்க விடலதுவுந்
தன்மமா சொல்லுந் தாயேதெய் வானையம்மா. (௧௦)

ஆரைத் துணையென் றடுப்பே னதற்குமொரு
பேரைத் தெரியே னுன்பேதைதெய் வானையம்மா. (௧௧)

நீயே மனமிரங்கி நேராக வந்தெனது
தாயே அருளெனக்கு தாதாதெய் வானையம்மா. (௧௨)

அன்பாக வுன்னை அர்ச்சித்துப் போற்றாத
வம்ப னெனமுனியேல் மாதேதெய் வானையம்மா. (௧௩)

வாராயோ நாயெளியேன் வருந்துவது நீயறிந்து
தாராயோ வுன்னருளுந் தாயேதெய் வானையம்மா. (௧௪)

ஏதுங் கதிவேறு யில்லையினி யிவ்வுலகில்
நீதுணையே யென்று நினைத்தேன்தெய் வானையம்மா. (௧௫)

பஞ்சமா பாவியிலும் பாவியிவ னென்றவொரு
வஞ்சம் நினையாமல் வந்தாள்தெய வானையம்மா. (௧௬)

தாயிழந்த கன்று தயங்குவது போலாக
சேயான் வினையதனாற் றிகைத்தேன்தெய் வானையம்மா.()

பண்டுநான் செய்த பழவினையை மாற்றுபவர்
உண்டோ வினையலது ஓதுந்தெய் வானையம்மா. (௧௮)

சென்ம மெடுத்ததிலுஞ் சிவபூசை செய்தறியாக்
கன்ம மகலவழி காட்டுந்தெய் வானையம்மா. (௧௯)

வாதித்த சூரர் மகுடமுடி யற்றுவிழச்
சேதித்த சேவகனற் றேவிதெய் வானையம்மா. (௨௦)

கல்லாத நாயேன் கற்றுங் கலையுணர்வு
இல்லாத பாவியுய்வ தென்றோதெய் வானையம்மா. (௨௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டளிந்து நின்று தயங்குஞ் சிறுவனைக்கை
விட்டு விடநினைக்க வேண்டாந்தெய் வானையம்மா. (௨௨)

வாட்டும் பிணியதற்கு மருந்தொன் றெனக்கீய்ந்து
காட்டுவா யுந்தனருள் கண்ணேதெய் வானையம்மா. (௨௩)

பண்டுள் ளடியார் பரவப் பவமகற்றல்
கண்டு முனைத்தொழுதேன் கண்ணேதெய் வானையம்மா. ()

வாழ்க வுனதன்பர் மாணிக்க வேல்கவியும்
வாழ்கநீ யென்றும் வாழ்வாய்தெய் வானையம்மா. (௨௫)

---

# கதிரைமகத்துவக்கீர்த்தனை.

தாதா கல்வி யன்னமே என்கிறவர்ணமெட்டு.

பல்லவி.

மனமகிழ்ந் தெனக்கருள் வேலனே—யுன்திரு (மன)

அனுபல்லவி.

கனமருவிய கதிர் மலைவளர் சாமியுன் (மன)

சரணங்கள்.

கந்தாகுகாமுரு கையாபன்னிருகரா
சந்ததமெந்தன்முன் வந்தருள்குருபரா (மன)

சுந்தரவள்ளிகுஞ் சரிமருவியதேகா
இந்தநல்வேளைநீ வந்தருளினியோகா (மன)

தாசனு மாணிக்க வேல்கவிக் கருள்சீலா
வர்சக் கடம்பனே வந்தரு ளுமைபாலா. (மன)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(௨) ஆருக்குத்தான்தெரியும் அவர்பெருமை என்றவர்ணமெட்டு.

பல்லவி.

காண்பவ ரெவ ரையனே—உன்மகிமையைக் (கா)

அநுபல்லவி.

காண்பவ ரினியந்தக் ககனத்தினிலு மில்லை
கண்டவ ருண்டெனச் சொல்லவுங் கேட்டில்லை (கா)

சரணங்கள்.

தென்கதிரைப்பதி வாழும்ஜெக தீசா
சித்தர்க்கெலாமொரு சித்தே கும ரேசா
நன்குறவர்குல நாயகி பிரா ணேசா
நான்முகன் றொழுவந்த நாதனேசர் வேசா (கா)

குண்டுவரைதோறும் நின்று விளை யாடுங்
குமரகுருபர குருவேநான் மறை தேடுங்
கண்டுமொழி தெய்வ யானை யுற வாடுங்
கந்தாகுகாமுரு காவென்று கவி பாடுங் (கா)

அகிலப்பிரபஞ்ச மாய்கை யதை வெல்லும்
அட்சரமாகுமுன் னாறெழுத்தை யல்லும்
பகலுமறவாமற் பக்தியுடன் சொல்லும்
பாலகன்மாணிக்க வேல்துணை யாநில்லும் (கா)

---

(௩) இராகம் உசேனி. ரூபகதாளம்.

பல்லவி.

கதிரை நாதனே—யெனக்காத்
தருளும்நீ தனே. (கதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபல்லவி.

மதியுலாவும் மதிவிநோதக்
கதிரையாகும் பதியில்மேவுங் (கதி)

## சரணங்கள்.

தஞ்ச மென்றே னே யுன்னைத்
தஞ்ச மென்றே னே
சந்ததமுந்தனை வந்தனைசெய்யுமென்
சிந்தைதெளிந்திட வந்தருளெந்தன்முன் (கதி)

என்று காண் பேனோ தெரிசனம்
என்று காண் பேனோ
என்று முனைத்தொழச் சென்றுகதிரையைக்
கண்டு கொள்ளும்வர மொன்றுஎனக்கருள் (கதி)

மாணிக்கவேல் தாசன் போற்றும்
மாணிக்கவேல் தாசன்
மாணிக்கவேல் கவி காணிக்கையாநிதி
பேணியுமக் கீய்வேன் மாணிக்கமாநதி (கதி)

---

## (௪) பல்லவி.

வேலனேவந் தென்னையாளுவாய் கதிர்
வேலனேவந் தென்னையாளுவாய் (வே)

## அனுபல்லவி.

ஞாலமுண்டவன் சோதரிபாலனே
நம்பியேதொழு மன்பனுமெனை (வே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணங்கள்.

அகிலமெல்லாங் காக்கும் வேதா
அடியேன் பேரி வின்னம் வாதா
மகிமை தங்குங் கதிரை நாதா
வந்தாளெனே கந்தா பரை
மைந்தாவரந் தந்தாள் கதிர் (வே)

சரசகுஞ் சரி வள்ளிச மேதா
சற்குணசிவ சண்முக நாதா
வரமதுதர ஏனின்னம் வாதா
வருவாய்வர கிருபாகர
திருவேபர குருவேகதிர் (வே)

நாசநிவாரண புண்ய க்ஷேத்ரா
நன்கருணைபொழி பன்னிரு நேத்ரா
தாசன்மாணிக்க வேல்நய தோத்ரா
தடமுங்கிடு கிடுவென்றிட
நடனம்புரி திடசெம்பத (வே)

---

(௫) சாலேசாலே அலவானிதோ என்கிறவர்னமெட்டு.

### பல்லவி.

வாவா வாவா வரமருள் ஏழைமுன்
வாவா வாவா வரமருள்

### அனுபல்லவி.

நாவலர் தமக்கருள் நாதவே தாந்தரீ (வா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணங்கள்.

காரண மிகத்தங்குங் கதிரைநகரில் வாசா
பூரண தயவதாய்ப் பூங்கழ லருளநீ (வா)

கார்குழ லாளுமை கண்களித்திடும் பாலா
சூர்சூ ரனைவென்ற சுப்பிர மணியநீ (வா)

வள்ளிதெய் வானையு மருவுங்குகா வர்ண
புள்ளி மயிலின்மீது பொருந்திய முருகநீ (வா)

தாசனு மாணிக்க வேலுதுதி புரியும்
வாசபங் கயபத வரதசண்முக னீயும் (வா)

---

(௬) பாருமேன்றன்கோலத்தை கண்ணால்

என்றவர்ணமெட்டு.

### பல்லவி.

வாருமெந்தன் வினைகள் தீர்க்கவே மயின்மீதேறி (வா)

### அனுபல்லவி.

சிருகந்த தென்கதிரை தெய்வமேநா னேதுசெய்வேன்
பாருமுனை யன்றி வேற்கதி— பார்த்தறியேன் (வா)

### சரணங்கள்.

சிந்தைமகிழ்ந்திந்த நேரம்
வந்து காப்பதுந்தன் பாரம்
எந்தையே யுனைப்பணியுநா—னேழை ஐயா (வா)

அப்பனென் னுனைப் புகழ்ந்து
செப்பினேன் கவி மகிழ்ந்து
தப்பித மெலாம்பொறுத்து நீர்—தயவுசெய்து (வா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி மணவாள னென்ன
புள்ளி மயில்வேல னுன்னை
தெள்ளு தமிழாற் றுதிசெய்வேன்—சிறுவன்முன்பு (வா)

சீல நீயருள் மாணிக்க
வேலன் சந்தநந் துதிக்க
ஞாலமதிற் காக்குந் தெய்வமே—நம்புமென்முன் (வா)

---

(எ) இராகம்-நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.
பல்லவி.

இன்னந்தயவு யில்லையா கதிர்காமாயேன்
இன்னந்தயவு யில்லையா.

அனுபல்லவி.

செந்நெற் பழனஞ் சூழுந் திருப்பரங்கிரி யீசா
தேவாதி தேவர் தொழுந் தென்கதிர் நகரவாசா (இ)

சரணங்கள்.

சூரர்முடியும் வாட்டியே புரந்தரற்கு
சோதிமகுடஞ் சூட்டியே
வாரைப் பொருதுங் கொங்கை வள்ளிகுஞ்சரியிரு
பேரைமணந்தகுகப் பெருமானேநீ யருள் (இ)

மைந்த னுரிமை சொல்லவா உனதடிமைச்
சொந்த மெனக்கே யல்லவா
இந்த தருணம்வந்து எளியேனைக் காத்தருள்
வந்த வினைகள்தீர மலர்க்கண்ணாற் பார்த்தருள் (இ)

சித்ரக்கலாப மயிலா சேணுலகோர்
சத்ருசங்கார வயிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரைதன்னிலும் நின்பதமற வாத
புத்திரன்மாணிக்க வேல்க்கருள் குகநாதா (இ)

---

(அ) ஏமணி சகிந்துனே யென்கிற வர்னமேட்டு.

பல்லவி.

ஐயோநா னென்செய்வே னய்யா உந்தன்
அடிமைக்கு அடிமையானதும்பொய்யா (ஐ)

அநுபல்லவி.

மெய்யா தென்கதிரை வாழ்
வேலனே பாலன் யானே (ஐ)

சரணங்கள்.

வரன்றரு பாலா வளர்வடி வேலா
மைந்தனெனைப் பிணியும் வருத்துதே யடிக்கடி (ஐ)

குங்கும தேகா மங்கள யோகா
கொடிய வினையதனு லடியேன் வருந்தலாமோ (ஐ)

வம்பவநாசா அன்பர் தனேசா
வறுமைப்பிணிக ளென்னை சிறுமைப்படுத்தலாமோ (ஐ)

சதுர்மறையாளா மதுர குணாளா
சஞ்சலமதனுலென் னெஞ்சம் வருந்தலாமோ (ஐ)

மனமதுநாடும் வரகவிபாடும்
மாணிக்க வேல்க்கருள் வரதசண்முக நாதா (ஐ)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(௯) இராகம்-சுருட்டி. அடதாளம்.

பல்லவி.

ஏதுயேது இந்தச்சூது யெவற்கு மில்லையே
யேழைமீது யிந்தவன்ம மேனோ சொல்லையே (ஏ)

வாதுசெய்தல் நன்மையென்ற நீதி யுள்ளதோ
மாயவஞ்சக் கபடமுன்றன் மனதி லுள்ளதோ (ஏ)

கதிரை வாழுங்குறவர் பெண்ணுற்கற்ற ஜாலமோ
காட்டு வேடனுகவடி வுற்ற கோலமோ (ஏ)

மதியையொத்த வனிதையைக்கண் டேய்த்த மாயமோ
மாவுந்தேனு முண்டு தீர்த்தங்கேட்ட ஞாயமோ (ஏ)

குறவர்காண மரமுமாகி நின்ற வேட மோ
கோவருந்து மாமன்வந்து சொன்ன பாடமோ (ஏ)

இறைவ னென்றுனைப் பணிந்தேனெங்க ளய்யனே
இந்தவேளை வந்துகாரு மினிய துய்யனே (ஏ)

வேறுதுணையில் லையென்று உன்னை நாடினேன்
வேலர்தாசன் மாணிக்கவேல் தமிழைப்பாடினேன் (ஏ)

---

(௧௦) எப்போதுகாணுவேனோ என்கிற வர்னமெட்டு.

பல்லவி.

பாலகதிரேசனே பரசிவ

அனுபல்லவி.

ஞாலந்தனிற்சிறு பாலன் வருந்துதல்
ஞாயமோவிது வென்ன வுபாயமோ அறிகிலேன் (பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணங்கள்.

வாடித்தவித்து உன்னைத் தேடித்திரியு மென்னை
வந்தாதரித்து வரந் தந்தாலுமக்கு நலம் (பா)

தாரணி தனக்குநீ காரணனென வெண்ணி
தங்குங் கதிரைநக ரெங்குந் தேடித்திரிந்தேன் (பா)

பத்தர்க்கிரங்கி யருள் சித்தனென மனதுள்
மெத்தப்புகழ்ந்து முனை நித்தந்துதிப்பேனையா (பா)

நாளுந்துதி மாணிக்க வேலு மனங்களிக்க
நாதா வரமருளும் நீதாவி புதர்தொழும் (பா)

---

### (கக) இங்கிலீஸ் நோட் இ-ம். மோகனம். சாப்புதாளம்.

பாலன்கவுரி பாலன்கவுரி பாலன்வாழ்கவே
பகருமுகில்மே னியர்தன்மருகன் பதமும்வாழ்கவே.

புனிதன்குமரன் புனிதன்குமரன் புனிதன்வாழ்கவே
புகழுமறையி லுறையுமிறைவன் சரணம்வாழ்கவே.

வேலன்கதிரை வேலன்கதிரை வேலன்வாழ்கவே
விபுதருலகுக் கமுதங்குகன்மங் களமாய்வாழ்கவே.

பெருமான்முருகப் பெருமான்முருகப் பெருமான்வாழ்கவே
பிரணவசிவ சரவணபவ வரதன் வாழ்கவே.

அருள்வானடியற் கருள்வானடியற் கருள்வான்வாழ்கவே
அரகரகுக வரதசண்முக னடிகள் வாழ்கவே.

---

கதிரைமகத்துவம் முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# திருப்பரங்கிரி அகவல்.



இது

மதுரைஜில்லா திருக்கோட்டியூர்போஸ்ற
அருளிக்கோட்டையில்வசிக்கும்
ரே. முத்திருளப்பபிள்ளைகுமாரர்
மதுரகவி

ரெ.மு.மாணிக்கவேலுப்பிள்ளை

அவர்களாலியற்றப்பட்டு,

பருத்தித்துறை
கலாநிதியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1913.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்.

# திருப்பரங்கிரியகவல்.

## காப்பு.

சீரார் பரங்குன்றத் தெய்வத் திருவகவற்
பாரார் பரவப் பவந்தீருங்—காரார்
வேழமுகத் தெந்தைபத மெய்யன்பா லெந்த
நாளுமகத் தேகொள்வோ நாம்.

## அகவல்.

திருமலி ஞானத் தெளிவினுக் தெளிவாங்
குருமலி வானக் குதபநீ பூட்கே
ஒளிதரு விளக்கா முருவினுக் குயிராய்
அளிவரு முதலா மனுதியாய்ப் பலவாய்
மதித்திடு மனதும் வாக்கினு மெட்டா
நிதித்திரள் வடிவாய் நினைப்பதற் கெளிதாய்
சுருதியி னந்த ஸ்வரூபமாப் பரமாக்
கருதியா னந்தக் கடற்கட வுளுமாய்
மதியுமா வானுய் வான்முகில் மழையாய்
பதியுமா சுகமாய்ப் பாத்திரா தீரமாய்
காண்சர மசர காரணப் பொருளாய்
மாண்பர சுவர்க்க மாகுமே நிதியாய்
அங்கினு மிங்கன்ற சங்கமா யெங்குந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிய மேன்றிருப் பரங்கிரி யானே
வேதனு முவண கேதனன் பிறையணி
நாதன் மகேச ஞஞ்சதா சிவனுஞ்
சத்தியோ டறுவருந் தங்கியோர் காரணப்
புத்திர ராய்வரும் பொற்பரங் கிரியனே
தெளிவுறு மனத்தாற் றியானித் திடவே
ஒளிபெறு முன்றிரு வோரார் முடியும்
ஓமப் பொடியி லோங்கு செந்தூரத்
தாமத்திலதந் தருந்திரு நுதலும்
பன்னிரு நோக்கும் பகர்குழைக் காதும்
மன்னிய குமிழ மலர்ப்பூ நாசியும்
பவழவாய் முத்தப் பற்களுந் தோளிற்
றவழரண் கண்மணித் தாழ்வட மார்பமும்
ஓர்கரத்தயிலு மோர்கை விபூதியும்
ஓர்கரப் பிரம்பும் ஒருகையிற் சூலமும்
ஓர்கரப் பாசமும் ஒருகர வாட்படை
ஓர்கரத் தண்டமு மோர்கரப் பாசமும்
ஓர்கரத் திகிரியு மோர்கரத் துவசமும்
ஓர்கரத் தம்புட னோர்கர விற்களும்
நற்கர மாறோ டாறிற் றுலங்கிட
பொற்கலை யிடையிகற் பொலிவுந் தோன்றிட
பங்கயக் காலிற் கிண்கிணி யாடிடத்
தங்கிய திருவடி தரித்தபொற் பாதுகை
வன்னக்கலாப மயின்மிசை கான்குற
மின்னுடன் குஞ்சரி மின்னிரு பாகமுந்
தோற்றிடத் தொண்டர் துதித்து மெக்காலமும்
போற்றிட வருபவன் பொற்பரங் கிரியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடவரை வெள்ளியங் கிரிபரங் கிரியினும்
நடமிடு குமரவேள் நாதனுஞ் சந்ததம்
வான்பொளி தோகை மலைவே ரகமுந்
தேன்பொளி சோலை சிமிலப் புனிதா
ஆவினன் குடிதிரு வருணை சேனுலகுங்
காவினந் திகழுங் கழுகா சலமும்
செந்திலம் பதியுந் தென்கதிர் காமம்
கந்தமா தனமுங் கண்டியுந் தணிகை
குன்றையம் பதியுங் கொடுமளூர் மேல்வயல்
கொன்றையன் காஞ்சியுங் குமரக் கோட்டமும்
நரபலி முருக நாமப் பெருவயல்
வரமலி கண்ண மங்கலந் தஞ்சைக்
கரந்தையம் பதியுங் கருதுபல் தலமுந்
தரந்துறை வான்றிருப் பரங்கிரி யானே.

## சுவாமி திருநாமம்.

மாயவன் மருகனு மயிலோனு முமை
சேயனு மறுமீன் சேயனு மாமே
சேந்தனுங் கந்த செவ்வேள் குஞ்சரி
காந்தனுஞ் செட்டி கடம்பனு மாமே
குருமுனி குருபரன் குருவே தன்குரு
திருமரு கனுமுரு கோன்பர னுமே
தோல்முக னரியரர் சுதன்வயி ரவருடன்
மாலனல் வீரர்பின் வருகுக னுமே
மகபதி சுதனியும் வனக்குற வனிதையை
அகமகி மகிழ்வுற வணைபவ னுமே
பொன்னு ரிலக்கப் பெயர்நவ வீரர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோ னெனவரு முதல்வனு மாமே
அறுமுனி புதல்வருக் கருளிய வறுமுகக்
குருபர குருகுவி லோதன னுமே
தகளூர் குழகனுங் சட்ட க்ஷரத்த
பகவனும் பகீரதி பாலக னுமே
மன்றக மாடிய வரன்றரு மைந்தனுங்
குன்றெறி வேற்கரங் கொண்டவ னுமே
அமரர்க் கிறைவனு மர்ச்சிப் பார்க்கருள்
குமரநா யகப்பேர் கொள்பவ னுமே
வரைகிடு கிடுவென வானுடு தெரிபட
சரவண மடுவினிற் றவழ்பவ னுமே
சூர்ப்பகை வென்ற சுப்பிர மணியனற்
பூட்பத மீய்ந்தருள் புனிதனு மாமே
மலியுங் கடப்ப மாலைபூண் டிலகிய
கலியுக வரதக் கடவுளு மாமே
வேதப் பொருளின் விபரநற் றுதைதன்
காதுக் கிசையக் கரைப்பவ னுமே
பகவதி சுதனெனு மகபதி மருகநின்
னகவற் பாவிதற் கருள்பரங் கிரியனே.

## சுவாமியின்றியானம்.

சரணஞ் சரணஞ் சண்முகக் குருவே
சரணஞ் சரணஞ் சரவண பவனே
சரணஞ் சரணஞ் சட்டட் சரத்தோய்
சரணஞ் சரணஞ் சங்கரி தனயா
சரணஞ் சரணஞ் சத்திவேற் கையா
சரணஞ் சரணம் வரபரங் கிரியானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிதெரிசனம்.

மேஷமும் ரிஷப மிதுனமுங் கடக
மாசமுஞ் சிங்கம் மாதுங் துலாமும்
விருச்சிகந் தனுசு மகரமுங் கும்பந்
திருத்திகழ் மீனப் பன்னிரு மாதமும்
அலரியம் புலியு மரத்தனும் புலவன்
புலவர்தங் குருவும் புயல்முது மகனுள்
வாரமோ ரேழில் வருகுமுவ் வேளையும்
காரண நின்னு றெழுத்துச் சரித்து
நாமந் துதிக்கும் நாயினுங் கடையேன்
தீமையு மகலச் செய்பரங் கிரியனே.

## சுவாமியிடம்வேண்டுகோள்.

பொன்னார் மகுடம் புனையும் புனிதா
நின்னு றெழுத்தி னேர்மையுங் காட்டுக
அளியார் குழல்மீ னம்பாள் புதல்வ
னெளியாற் கெளிய னெங்கோ நீயெமைப்
பெற்றவ னுன்றன் பிள்ளைநான் செய்த
குற்றமெத் தனையோ கோடி யானலுங்
கிஞ்சிற் றேனுங் கிலேசித் திடாமற்
கொஞ்சிய வாழ்வுங் கொடுத்தருள் புரிக
கீரனோ டருண கிரிமுசு குந்த
காரண னயனுங் கலச முனிமிக
எண்ணிலா தன்ப ரிருடிகள் விபுதர்
நண்ணுவர் நின்குக நாம மந்திரமே
பொன்னடி போற்றுவர் புனிதனே யேழை
யென்னையுங் கண்பா ரெங்கஷி நீங்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமது தரவினி மயின்மிசை விரைவினில்
பரகுக வருகநீ பரங்கிரி வரதனே.

## சுவாமியிடம்தன்னைக்காக்கவேண்டுதல்.

சிகைவளர் சென்னியை செவ்வேள் காக்க
வகையுறு நுதலை வடிவேல் காக்க
புருவமு மிருவெளி பொன்வேல் காக்க
தருமிரு கன்னந் தனிவேல் காக்க
அலகிரு நாசியும் அறுமுகன் காக்க
இலகிய வாய்நா வினியவேல் காக்க
பல்லுட னதரம் பரன்குரு காக்க
சொல்லுட னருளுஞ் சுடர்வேல் காக்க
கழுத்தும் பிடரியுங் கதிர்வேல் காக்க
வழுத்திடு மிருதோள் மதிவேல் காக்க
கரங்க ளிரண்டையுங் கந்தவேள் காக்க
புறமுது கதனைப் புனிதவேல் காக்க
நெஞ்சமு மதியும் நீதிவேல் காக்க
கஞ்சமா முந்தியைக் கருணைவேல் காக்க
இடுப்புந் துடையும் விங்கமும் குய்யம்
அடுக்குஞ் சகனமு மருள்வேல் காக்க
முளந்தாள் சரணை முனைவேல் காக்க
வளர்ந்திடு விரல் நகம் மதிவேல் காக்க
அங்க முழுது மருள்வேல் காக்க
தங்குமென் னுயிரை சற்குரு காக்க
மனைவியர் மக்களை மதிவேல் காக்க
கனமுறு மில்லங் கதிர்வேல் காக்க
அல்லும் பகலு மறுபது நாழியும்
வல்லவ னென்முன் வந்தெனைக் காக்க
வெளிப்படும் எந்த வேளையா னாலுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்புட னென்னைக் கதிர்வேல் காக்க
நித்திரை வேளையில் நின்மல னீன்ற
புத்திரன் காக்க பொற்பரங் கிரியனே.

## சுவாமியிடம் பேயணுகாதபடி வேண்டுதல்.

அல்லும் பகலு மந்தியுஞ் சந்தியும்
சொல்லு முன்னுமந் துதித்திடும் பேரை
பில்லி சூனியமும் பூதம் பேய்களும்
அல்லற் படுத்தும் அடங்கா முனிகளும்
கண்டு நடுங்கிட கருணைசெய் வரதா
விண்டுதன் மருகா வீரா நமோநமோ
சிரவலி கண்ணோய் செவிகளி னடைப்பும்
சுரபீ னிசமுஞ் சொன்முகப் பருவும்
பற்குத் தரணை பகர்நாப் பிணியுஞ்
சொற்கள மாலை தோள்மார் பாணி
குன்ம வலியுங் குடைச்சலு மீளை
கன்மப் பிணியுங் கடுவன் படுவன்
வெள்ளை நீரளிவும் மேகப் புண்களும்
சள்ளையுஞ் சூலை சயித்திய காசமும்
அரையாப் பிரும லாண்குறி நோய்களும்
வரைதுடை வாளை வலிப்புஞ் சுழுக்கும்
சித்தப் பிரமையுஞ் செப்புநோய் பலவும்
நித்த முன்னுமம் நினைத்து வெண்ணீறும்
அள்ளியே தூவ வன்னோ யகன்றிட
வள்ளியி னுதா வரமெனக் கருள்வாய்.

## சத்துருவகல.

உன்னையு முன்புக ழோதுமுன் ருசு
னென்னையு மெண்ணு தெதிர்க்கும் பேய்களை

UNIVERSITY OF CEY
28 NOV 1946
LIBRARY.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டு வெட்டு விரைந்து பாசத்தாற்
கட்டு கட்டு கால்கை முறிய
குத்து குத்து குடலுஞ் சரிய
மொத்து மொத்து விளிகள் பிதுங்க
அடியடி பிடிபிடி நெறிநெறி முறிமுறி
பொடிபடத் தூளாய்ப் பிடித்து நொறுக்கு
பளித்திடுங் கொடிய பசாசுக ளில்லம்
சுளித்திடு மழலா யெரித்திடு மயிலோய்
வருக வருக வள்ளியி னுதா
வருக வருக வந்தெனைக் காக்க
பாலன் மாணிக்க வேல நானுதுஞ்
சீலமா மகவற் றிருவுளத் தேற்கும்
சத்திவேற் கையா தரணியில் நீதரும்
புத்திர னுன்செய் பிழையும் பொறுத்து
நீங்கா வாழ்வும் நிலைபெறுஞ் செல்வமும்
பாங்கா யெனக்குப் பன்னிரு கரனே
அருள்புரி வேலோய் ஆறெழுத் தரசே
குருவினும் பரம குருவு மென்குருவே
வாழ்க வாழ்க வாழ்கவுன் றிருவடி
வாழ்கவுன் பொற்கர வயிலுமெ னன்னையர்
வாழ்கக் கலாப மயிலுஞ் சேவலும்
வாழ்க நினன்பர்சை வாகமம் வாழ்கவே.

திருப்பரங்கிரியகவல்முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சோளீஸ்வரர்பேரில்

# தேவாரச்சந்தப்பதிகமும்
# தம்பிராட்டியார்பஞ்சரத்தினமும்

இதிலடங்கியிருக்கின்றன.



இஃது

மதுரைஜில்லா திருப்புத்தூர்தாலுக்கா

அருளிக்கோட்டை

## ரெ. மு. மாணிக்கவேலுப்பிள்ளை

அவர்களாலியற்றப்பட்டு

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்.

## சோளீஸ்வரர்பேரில்

# தேவாரச்சந்தப்பதிகம்.

விநாயகர்காப்பு.

சீர்நிறை யருளை மாநகர் வாழ்ஜக தீசனது
பேர்நிறை பதிக மோதுதற் கிந்தப் பூதலத்தில்
தார்நிறை தருமத் தலைவியின் புதல்வன்றனை
கார்நிறை வேழமுகனை முப்போதுங் கைதொழுவாம்.

சங்கரா சிவனே தற்பரா விமலா
சாம்பவி கேள்வனே பாண்ட
ரங்கனே யெகின மிரைந்திடு புலஞ்சூ
ழருளைவீற் றிருக்குமென் சோதி
மங்கையர் காம வலைதனிற் சிக்கி
மருண்டிடா தெனக்கருள் புரிவாய்
பொங்கர வணிந்த பூத நாதனேசோ
ளீஸ்வர னெம் பெருமானே. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமே முக்கண் ணனு மணியே
யிறைவனே செந்துவர்க் குன்றே
அன்பர்க ளிதைய முளரியின் வண்டா
யருளோவீற் றிருக்குமென் சோதி
தன்பெருங் கருணை மாரிவந் தடிமை
தழைப்பதற் கென்றினிச் சுரக்கு
மன்புட னெனக்கிங் காடலாய் சோளீ
ஸ்வரனெனு மெம்பெரு மானே. (உ)

அரவமே யணிவா யய்யனென் பரனே
ஆரமு தேபழம் பொருளே
புரமொரு மூன்று மெரித்தவா விபுதர்
போற்றிட வருளோவீற் றிருந்த
பரமனே யுமையாள் பாகனே கமலப்
பாதனே நாயினே னுய்ய
வரமது நல்குந் தருணமே சோளீ
ஸ்வரனெனு மெம்பெரு மானே. (ங)

வேதநா யகனே நின்பத மல்லால்
வேறெனக் கதியலக் கண்டா
யாதிநா யகனே யமரர்கள் பரவ
வருளோவீற் றிருந்தநா யகனே
சோதிநா யகனே தொழும்பர்க ளிதையத்
தொடுங்குநா யகனே மாசைவ
நீதிநா யகனே யென்றனை யாள்சோ
ளீஸ்வர னெம்பெரு மானே. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மால்தனக் கன்று திகிரியொன் றீந்தாய்
மலைமகள் பாகனே முன்னு
ளாலமு முண்டா யடியவர் பரவ
வருளைவீற் றிருக்குமென் சோதி
சூலமு மேந்து வெண்பிறைச் சடையாய்
தொழும்பரை விழுங்குசூன் முகிலே
சோலியா நலித லென்றனை யாழ்சோ
ளீஸ்வர னெம்பெரு மானே. (௫)

கூற்றினை யுதைத்த குன்றவில் லியனே
குழகனைத் தந்தமா தேவா
ஆற்றொடு மதியு மணிந்தசெஞ் சடையா
யருளைவீற் றிருக்குமென் சோதி
தோற்றமே விமலா சுருதியின் வடிவே
சுக்தசை தன்னியப் பெருக்கே
சாற்றுவா யடிமை யுய்ந்திடு வண்ணம்
சங்கரா வெம்பெரு மானே. (சு)

கற்றவர்க் கினிய கன்னலி னமுதே
கங்கைவே ணியனே நின்கருணை
யுற்றவர் பணிதற் கருளைவீற் றிருந்த
வும்பர்கட் கிறைவனே ஞான
மற்றவர்க் கரிதா நின்கழல் பரவ
வரமருள் திரிபுர தகனு
நற்றவர் நண்பர் நாதனே சோளீ
ஸ்வரனெனு நம்பெரு மானே. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமே நல்லோர் நாடுமெய்ப் பொருளே
நாதனே நாதவே தாந்த
மோனமே சீவன் முத்தர்கள் பரவ
முன்னவா வருளைவீற் றிருந்த
தானமே தவமே சச்சிதா நந்த
தற்பரா சிற்பர வடிவே
ஏனமே விளக்கு மென்றனை யாள்சோ
ளீஸ்வர னெம்பெரு மானே. (அ)

வேதனை முன்னம் பிரணவப் பொருளை
வினவெனப் புகன்றவர்க் கினிய
தாதையா கியநின் றூசர்கள் பரவத்
தானெழுந் தருளைவீற் றிருந்த
போதனே ஞான புனிதனே யடிமை
பொன்னடி பரவுதற் கருள்வாய்
நீதனே சூல பாணியே சோளீ
ஸ்வரனெனு மெம்பெரு மானே. (௯)

முக்கனி ரசங்கால் வாய்வழி சென்று
முருபரை நிறைந்திடு மருளை
முக்கணன் சுடலை யாடுவா னின்ப
முதல்வனை யகமகிழ் வொடுமா
ணிக்கவே லோது பதிகமீ ரைந்து
நீணிலத் துறைபவர் புகல
நக்கனன் னருளும் பெற்றுமென் றளியா
நற்பதம் நாடுவர் தினமே. (௧0)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுசந்தம்.

அனந்தனே அரனே யெம்மையாட்
கொண்ட கருணை போற்றி
அனந்தனிற் றுயில்வோ ரூடு
மருளோசோ ளீசா போற்றி
அனந்தமாய்த் துலங்கு கின்ற
அத்தனே அன்பே போற்றி
அனங்கமா யொளிர்செம் பாத
மருளுவாய் போற்றி போற்றி. (க)

கரியுரி போர்த்தாய் போற்றி
காலனே காலா போற்றி
அரியயற் கரிதாய் நின்று
யருளோசோ ளீசா போற்றி
திரிபுர மெரித்தாய் போற்றி
திகழ்மதிச் சடையாய் போற்றி
சரியணி தலைவி பாகா
சங்கரா போற்றி போற்றி. (உ)

மான்மழு கரமேற் கொண்ட
வள்ளலே பரனே போற்றி
தானமர்ந் தருளை மேவுஞ்
சதாசிவப் பொருளே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானறி வில்லா தேழை

நம்பினே னருள்வாய் போற்றி

ஆனைமா முகனை யீன்ற

ஐயனே போற்றி போற்றி. (௩)

மனமெனும் பாவி யையோ

வருத்துமென் செய்வேன் போற்றி

*தனமெனுந் தருக்கள் சூழும்

அருளைசோ ளீசா போற்றி

கனவெனுஞ் செல்வ மீதைக்

கருதிலேன் கண்டாய் போற்றி

வனமலர்ப் பாதம் போற்றி

வழங்கருள் போற்றி போற்றி. (௪)

செந்தமிழ்க் கினியாய் போற்றி

சிவபுரத் தரசே போற்றி

அந்தமி லாத வன்பே

யருளைசோ ளீசா போற்றி

கந்தமார் குழலாள் மோகக்

கனியேநின் கருணை போற்றி

சந்தத முனையான் போற்றுந்

தன்மைசொல் போற்றி போற்றி. (௫)

---

*தனம்-சந்தன விருக்ஷம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியின் முதலே போற்றி
முப்பழச் சுவையே போற்றி
அத்தியி னுரிமேற் கொண்டா
யருணைசோ ணீசா போற்றி
பத்தியிற் சிறந்த தாசர்
பங்கினி லிருப்பாய் போற்றி
சத்தியின் கொழுந போற்றி
சாம்பவா போற்றி போற்றி. (௬)

கறையுறை கண்டா போற்றி
கருணைமா கடலே போற்றி
அறைபவர்க் கரிது மாந
யருணைசோ ணீசா போற்றி
முறைமுறை யுனையாள் போற்ற
முன்னவா வருள்வாய் போற்றி
இறைவனே மங்கை பாகத்
தீசனே போற்றி போற்றி. (௭)

அம்புய மலரின் பாத
மென்றெனக் களிப்பாய் போற்றி
அம்புவி யதனிற் சீரு
ரருணைசோ ணீசா போற்றி
நம்புமிவ் வெளிய னென்னை
நாதனே காப்பாய் போற்றி
சம்புவே பரனே தீன
தயாளனே போற்றி போற்றி. (௮)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியின் றுரும்பா மென்ன
வங்குமிங் கலேங்தேன் போற்றி
ஆழியை நெடியோற் கீய்ந்த
அருளைசோ ளீசா போற்றி
ஆழியிற் சிறந்த இந்து
மணிந்த வென்னரனே போற்றி
ஆழியா னுனக்கென் னொரு
மடிமையே போற்றி போற்றி. (கூ)

ஏணிக்கு ளிரவி போலு
மிலங்கிடு மருளை சூல
பாணிக்கு மிசைந்த தான
பதிக மீரைந்து மன்பன்
மாணிக்க வேலு வெண்பா
னிசைத்ததை யீசன் பாத
காணிக்கை யாமென் றெண்ணி
கழறுவா ரவரே கற்றோர். (க0)

வேறுசந்தம்.

நேமியுண்ட காவற் கடவுளெனும்
நேமி யானுமுன் சூகர மாகியே
பூமி யாமெழு லோகமங் தம்வரை
புகுந்து ஆண்டுநூ றுயிரங் தேடினும்
காமி யாவீர கண்டை கவிலெனுங்
கலிக்குஞ் செம்பது மக்கழலுக்குள்
சாமி யன்பருக் கன்பனு மாகினேன்
றமிய னென்றனை யாளுஞ்சோ ளீசனே. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பத்துமுக் கோடி விபுதரு
முனிவர் நாலுபத் தோடுமெண் ணாயிரந்
தோன்று மெண்டிசைப் பாலர் வசுக்களுந்
துய்ய தும்புரு நாரதர் மற்றுளோர்
மீன்று தில்லையிற் கண்களிப் புற்றிட
மிர்துவாக நின்றாடிய பொற்கழல்
சான்ற வன்பருக் கன்பனு மாகினேன்
றமிய னென்றனை யாளுஞ் சோளீசனே. (உ)

தாரு காவன மாதவர் தையலர்
தம்மை யின்பொடு கண்டும் மருவிட
மாறு வேடமுங் கொண்ட விடந்தனில்
மாலும் பின்றொடர்ந் தேவர வேகின
கூறு நாலு மறையு மறிந்திடாக்
கொன்றை சூடியுன் செம்பது மக்கழல்
சாரு மன்பருக் கன்பனு மாகினேன்
றமிய னென்றனை யாளுஞ் சோளீசனே. (ங)

வண்டி னம்மிசை பாடுந் திருக்குழல்
வான்மதி யொளியை வென்ற நன்முகங்
கண்டி னும்மினி தான திருப்புகழ்
கருணை யேதரு கின்ற வருள்விழி
கொண்ட வன்னைதம் பிராட்டியர் கோவெனுங்
கொன்றை சூடியுன் செம்பது மக்கழல்
தண்ட மென்பருக் கன்பனு மாகினேன்
றமிய னென்றனை யாளுஞ் சோளீசனே. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

சீதள மிகும்பிறை சேருஞ் சென்னியான்
பீதக வொளிவினைப் போலு மேனியான்
பாதக மென்கலிப் பற்றறுத் திட்டவன்
நீதகத் தோர்கள் முன்னின்ற சோளீசனே.

சோளீஸ்வரர்பேரில் தேவாரச்சந்தப்பதிகம்


முற்றிற்று

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பரமபதிதுணை.



# தம்பிராட்டியார் பஞ்சரத்தினம்.

ஆசிரியவிருத்தம்.

சீருலவு மணிமகுட சிகரமுங் கமழ்கின்ற
திவ்யமல ரணிகொண்டையுஞ்
சீதபூ ரணதிங்கள் வதனமுஞ் செந்தூர
திலதமிடு நுதலினழகும்

பாருலவு மன்பர்கட் கிருளகல கருணையாற்
பார்க்கின்ற திருநயனமும்
பகரரிய கம்மலிரு கன்னமிசை துன்னசெம்
பவளவா யமிர்தமொழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

சீதள மிகும்பிறை சேருஞ் சென்னியான்
பீதக வொளிவினைப் போலு மேனியான்
பாதக மென்கலிப் பற்றறுத் திட்டவன்
நீதகத் தோர்கள் முன்னின்ற சோளீசனே.

சோளீஸ்வரர்பேரில் தேவாரச்சந்தப்பதிகம்


முற்றிற்று

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பரமபதிதுணை.



# தம்பிராட்டியார் பஞ்சரத்தினம்.

ஆசிரியவிருத்தம்.

சீருலவு மணிமகுட சிகரமுங் கமழ்கின்ற
திவ்யமல ரணிகொண்டையுஞ்
சிதபூ ரணதிங்கள் வதனமுஞ் செந்தூர
திலதமிடு நுதலினழகும்

பாருலவு மன்பர்கட் கிருளகல கருணையாற்
பார்க்கின்ற திருநயனமும்
பகரரிய கம்மவிரு கன்னமிசை துன்னசெம்
பவளவா யமிர்தமொழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருலவு கலசநிகர் கொங்கையும் வெண்டரள
மருமமும் பூசுகளப
வாடையுந் தொடிகடக மணியுமல ரத்தமும்
மருங்கிலகு பொன்னுடையும்

தாருலவு பாதகட கஞ்சிலம் பொடு தண்டை
தானதிர்ந் திடவருகுவாய்
சங்கினந் தவழ்பழன மெங்குநிறை யருளீவளர்
தாயேதம் பிராட்டியுமையே. (௧)

காளிகங் காளிதிரி சூலிகரு ணாகரி
கவுரிபரை யபிராமிநீ
கவுமாரி சூரிஜய வீரியுமை நாரிநீ
கன்னிமுக் கண்ணிநீயே

வாளிபரி பூரணிம நாதீத காரணி
மறையோது ஜககாரணி
வரனிடது பாகிநீ மாதவர்க் கரசிநீ
வரைராஜ தவபுத்திரியெண்

தோளிசிவ் சங்கரி சவுந்தரிநி ரந்தரி
சுந்தரி யந்தரிபரஞ்
சோதிமய மாயங்கு மிங்குமெங் குந்தங்குஞ்
சுமங்கலை மனோன்மணியுவே

தாளிநீ சிம்மவா கனமேறி யென்முனே
தான்வருவ தென்றுபுகலாய்
சங்கினந் தவழ்பழன மெங்குநிறை யருளீவளர்
தாயேதம் பிராட்டியுமையே. (௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருமிலை கதியுனது பாதார விந்தமே
யடியனேற் குளதுமென்று
மறியாது இரவுபக லயராது துதிசெயா
தறிவிலி யெனமனங்கற்

பாறோ கரும்பொனோ வென்னவென் சொல்வதிப்
பாவியென் மடநெஞ்சமும்
பரிவாக நின்றிருப் பாதபங் கயமதைப்
பரவுதற் கருள்புரிகுவாய்

ஆறுமுக மானவுரு வாகிவரு முருகருக்
கன்னையென வந்தமயிலே
ஆரணி முராரிசோ தரியே கிருபாகரி
யானந்த மாகியுனையே

சாருமு னன்பர்க்கு வேதுசன் மார்க்கமுஞ்
சாற்றுதற் கிதுதருணமே
சங்கினங் தவழ்பழன மெங்குநிறை யருளைவளர்
தாயேதம் பிராட்டியுமையே. (௩)

ஞானமென் னெருசாக ரத்துலவு வங்கமே
நவிலுலகு தருதங்கமே
நளினமொடு திருநடன மிடுகடவு ளொடுமருவ
நாரிபக வதிநாரணி

தேனொழுகு முளரிமல ரெனவொளிரு கழலினந்
தேடுகின் றோர்க்கன்னையே
தேவதே வர்க்குமரி தானபே ரின்பமே
திகழ்கின்ற கருணைவடிவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானென்ற வாணவங் கொண்டுமலே கின்றவிண்
சண்டாள னெனதிருளகத்
ததிநடுவி லுனதுஅருளெனுமதியி னொளிவினைத்
தருதற்கு மிதுநாளினிற்

தானெது நினையலது வேறுபுக லில்லையே
சங்கரி யருடருகுவாய்
சங்கினங் தவழ்பழன மெங்குநிறை யருளேவளர்
தாயேதம் பிராட்டியுமையே. (௪)

சீலமென் பதுசிறிது மில்லாத வீணரொடு
சேர்ந்தவர்க் குறவாகியுந்
தீவினை விளைப்பது மலாதுமட மாதரைச்
சிந்தையி நினைந்துமவர்கள்

சாலமொடு பேசுவச னத்திலும் பங்தெனச்
சாற்றிளங் கொங்கைதனிலுந்
தானின் றுழன்றுமன மோநன்று தீதென்ப
சற்றுமறி வுற்றிடாதே

பாலாழி மீதுதுயி லீலாவி னோதனெழு
பாருண்ட வன்றங்கையே
பாவியா னுலகில்வந் தந்நாளி நாள்முதற்
படுந்துயர் கணக்குமுளதோ

தாலமிடு நின்கமல தாள்தந்து மென்றனைத்
தானும்ரட் சிப்பதென்றோ
சங்கினங் தவழ்பழன மெங்குநிறை யருளேவளர்
தாயேதம் பிராட்டியுமையே. (௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு விருத்தம்.

தெருளாய் வெளியா யொளியாகித்
திகழ்பூ ககன மதிபகலாய்
உருவா யுருவிற் குயிர்நிலையா
யுளதா யிலதாய் மறைமுடிவாம்
பொருளாய் நிறைவா யிறைவியெனும்
புகலா யகலா விரதினர்பால்
குருவாய் வருவா யருளைநகர்க்
குணமே யெணையா ளம்பிகையே. (க)

அம்மா வுனக்கேன் மனமில்லையோ
அருளுங் கொடுத்தாள் வதுமலையோ
சும்மா வருமுற் பவநிலையோ
துயரே யலவேற் பயனுளதோ
செம்மான் மழுவுங் கரமேந்து
சிவனே டுறைபார் வதியேகே
ளம்மா வினியெப் படியுய்வே
னருள்வா யருளை யம்பிகையே. (உ)

கல்லோ வுனது மனமுமிரு
காதுஞ் செவிடோ வோர்புகலுஞ்
சொல்லா மௌன நிலையோதான்
சூதோ வாதோ வறியேனீ
எல்லா மமைத்தா ளிறைவியென
விசைப்போ ரிசையு மிதுதானோ
சொல்லா யருளை மாநகர்வாழ்
சுகநா ரணியெ னம்பிகையே. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னந் தயவு வரவிலையோ
வெளியே னுரையெள் ளளவேனுங்
கன்னந் தனிலும் புகுதலையோ
கண்க ளிலையோ வருளிலையோ
அன்னே வடியே னினிப்பிறவா
தருளும் பொருளு மினியிலையோ
மின்னே யுரையா யருளைநகர்
மேவுஞ் சுகமெ னம்பிகையே. (௪)

என்றோ கிருபை தங்குமெனக்
கென்றோ விப்பாழ் வினைதீர்வ
தென்றோ வடியர்க் கடியனென
வென்றோ ரிசையும் வருநாளும்
என்றோ வினியெங் கமலமனத்
தென்றோ விருந்துமினி துறைவ
தென்றோ வுரையா யருளைநகர்க்
கிறையே யெனையா ளம்பிகையே. (௫)

## கலித்துறை.

வாராய் மனோன்மணி யேயருள் காரணி வதனமின்னூ
பாராய் பழவினை மாருதங் கண்டிடு பஞ்செனவுந்
தீராய் செழுங்கம லப்பத மியானுந் தினம்பரவத்
தாரா யருளை மாநகர் வாழ் தம்பிராட்டியரே. (௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைத் திறங்கொண் டெனையாளு மம்பிகை யலவனிறை
சடிலத் தரன்கண் சார்ந்தவ ளேசிவ சாம்பவியிக்
குடிலத் தகமோ வுனைப்பணி வோமெனக் கொஞ்சமுமெள்கக்
கடையத் தளவு நினையா திருப்பதென் கன்மமதோ. (உ)

முன்னாட் டிரிபுர முந்தீ யெழநகை முதல்வனொடு
பொன்னாட் டிருநடம் நடிப்பவ ளேநின் போதமதை
யென்னாட் டெனக்குரைப் பாய்நீ யியம்புக யினியதமிழ்ப்
பன்னாட் டுலவு பொருளே யருளெம் பராசத்தியே. (ங)

கண்ணே கண்ணி னொளியே தெளிவாங் கருணைபெய்யும்
விண்ணே விண்ணின் றருவே திருவே வேதாந்தப்
பண்ணே பண்ணின் றருநிதியே நின்பா லுகந்தேன்
எண்ணே யெனையாண் டருள்புரி வாய்செக தீஸ்வரியே. (ச)

அய்யோ மனமேகேள் கேளுனக்கு அறிவுமில்லை
மெய்யா னமன்வருவேளை யுண்டேயவ் வேளையிலென்
செய்வாய் கதிவே றுளதோ இலையே நீமனமே
உய்வாய் பரைதா ளிணையை முப்போது முட்கொளவே. (ரு)

கோச்சகம்.

மூன்று மயமாகி முத்தொழிற்குங் காரணமாய்த்
தோன்றும் பெருங்கருணைச் சோதிவடி வாய்நிறைந்த
தோன்றத் துணையே சுத்தஞா னக்கடலே
ஆன்றோர் பரவு மறிவேமா தர்க்கரசே. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமமா ருஞ்சடிலத் தவர்பாற் றுவர்தடமென்
ரூமமா ருந்தகைமைத் தாய்வீற் றிருப்பவளே
தாமமா ருங்கமலத் தாளுமடி யேற்குதவ
தாமமா குமருளைத் தாயேமா தர்க்கரசே. (உ)

அய்யோ அருட் குருவுமாகி யடியேற்கு
மெய்யாகு போதம் விளம்பக் கருதிலையோ
பொய்யா மஞ்ஞானப் புறச்சமயத் தேவீழச்
செய்யாதே வானோர் தேடுமா தர்க்கரசே. (ௗ)

கற்றறியா மூடக் கடைய னெனதுகலிப்
பற்றுமின் றேயறுத் துன்பதுமக் கழலுக்கன்
புற்றுப் பரவ வினிப்பொருளும் புகலம்மே
உற்றுப் பார்த்தாட் கொளுமையே மாதர்க்கரசே. ()

பாவி யென்றனைப் பழியா தெனக்கருள்மா
தேவி யிருள்நீக்குஞ் செஞ்சரணுக் கந்தமலர்
தூவியருச்சிக்குந் தொழும்பரொடு கூட்டுகவென்
னுவித் துணை யேயெனம்மா மாதர்க்கரசே. (ரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா.

அன்னை நீ யென்றே யடுத்தே னுனையலது
பின்னை எனக்கேவேற் புகலுண்டோ—என்னை
காரா திருந்திடிலிக் காசினியோ ருன்னைத்
தாரா திருப்பாரோ சொல். (கூ)

ஏனம்மா யிவ்வா தெந்தநா ளிற்படித்தாய்
நானம்மா யேழைசக நாரணியே—கானம்மா
ஆனாலு மென்னை யாளாது யெங்கொளித்துப்
போனாலு முனைவிடுதல் பொய். (எ)

அழுங்குழவிக் கன்போ டமுதூட் டுவாயெனவுஞ்
செழுங்குழவி மதிவதனச் செல்வி—யெழுங்கருணை
யாழியே யென்ற னல்லல்தீர்த் துன்பதும
தாளிணையென் றும்பரவத் தா. (அ)

தாயே யுனதுதன் மகிமையை யிந்த
நாயினேன் கண்டு நவில்தரமோ—ஆயே
ஆயே யெனப்பலரோ டமரர் தினம்பரவுந்
தூயபத மென்றுந் துணை. (கூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பு பாராட்டுவது மாலல்ல நானேழை
தம்பிராட்டி யென்னுந் தாயே—அன்புடனீ
யென்று மெனைக்காக்க வென்று முனைப்பரவ
வென்று மெனக்கருள் வாயே. (க0)

வாழ்க வம்பிகை வாழ்க வரன்கழல்
வாழ்க சைவமும் வாழ்க வடியவர்
வாழ்க செந்தமிழ் வாணரி னங்களும்
வாழ்க வையகம் வாழ்கவென் னுளிதே. (கக)

தம்பிராட்டியார் பஞ்சரத்தினம்

முற்றிற்று.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாற்றுக்கவி.

மதுரைஜில்லா திருப்புத்தூர் அருள்வாக்கி வித்துவதீபட்
வாலவெண்பாப்புலியாகிய
**ஆ. பி. அபுதுல்காதிறுப்புலவர்**
இயற்றியது.

## ஆசிரியவிருத்தம்.

தண்கமலவாவிபுடைசூழமருளைப்பதி
தங்குசைவாகமத்தான்
சற்குணன்ஞகுமுத்திருளப்பபூபனுயர்
தவச்செயலினுலுதித்தோன்
கங்கைகுலதிலகனுவந்தனனிகந்தனிற்
கவிதைமழைமாரிபொழியுங்
கார்மேகமொத்தமாணிக்கவேல்நாவலன்
கதிரையின்மகத்துவமென
மங்களமதாகவேகூறியதமிழ்க்கதிக
மனமகிழ்வுகொண்டுமுருகன்
மயிலேறிநடனமிடவாணிதம்புருமீட்ட
மலையமுனிமிகவாழ்த்திட
திங்கள்சூடியபரமசிவனுமொருகால்தூக்கி
சிற்றம்பலத்திலாட
தேவரெல்லாங்கேட்டுமங்களம்பாடிச்
செழித்தாசிகூறினரரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative 1
Reel No. 1/062
Date: 1/11/91

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௫ | ௧௪ | கரஞானந்த | கருஞானந்த |
| ௨௩ | ௬ | சிவனுநா | சிறுவனுநா |
| ௨௯ | ௧௨ | செய்து | செய்துசிறு |
| ௩௧ | ௧௫ | தெயவானை | தெய்வானை |
| ,, | ௧௯ | வினையலது | வுனையலது |
| ௪௮ | ௭ | மிருவெளி | மிருவிழி |
| ,, | ௨௭ | மறுபதுநாழியும் | மறுபதுநாடியும் |
| ௫௪ | ௨ | ணனுமணியே | ணென்னுமாமணியே |
| ௯௦ | ௨௪ | மக்கழலுங்குள் | மக்கழலுக்குள |
| ௯௮ | ௧௯ | மனேன்மனி | மனேன்மணி |
| ௭௦ | ௧௪ | யென்றனை | யென்றென்னை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative 1
Reel No. 1/062
Date 1/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 SEP 1963
LIBRARY
Class No. 894.811.17
Class 43483
Author & Brief Title
tiral
kattuvonm
UNIVERSITY
PRESS
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43483
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org